விலை: சதம் 75 ★★

ஈழநாடு
THE EELANADU

மலர் 23 புரட்டாதி 9 துல்ஹஃ 25 இதழ் 223
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 25 9-1981

"தமிழர் நாட்டை ஆக்கிரமித்தால் சிங்களவர் கடலில் விழவேண்டும்!"

பாராளுமன்றத்தில் டாக்டர் நெவில் பெர்ணண்டோ

[கொழும்பு]

''இலங்கையில் ஒரு கோடி சிங்களவர்கள் வாழ்கிறார்கள். உலகில் ஏழ கோடித் தமிழர்கள் இருக்கின்றார்கள். தமிழர்கள் இந்தநாட்டை ஆக்கிரமித்தால், சிங்கள மக்கள் கடலில்தான் போய்விழவேண்டும்'

இவ்வாறு பாணந்துறை எம். பி. டாக்டர் நெவில் பெர்ணண்டோ நேற்று பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

அவசரகாலச்சட்டத்தை மேலும் நீடிப்பது சம்பந்தமாக பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் பேசுகையில்தான் டாக்டர் நெவில் பெர்ணண்டோ மேற்கண்டவாறு கூறினர். அவர் மேலும் கூறியதாவது.

''இலங்கையில் தமிழர்கள் நசுக்கப்படுவதாகக்கூறி, தமிழ் நாட்டில் ஹர்த்தால் நடத்தி, எங்களைப் பயமுறுத்துகின்றனர். உலகில் வாழும் ஏழு கோடித்தமிழர்களும் இலங்கையை ஆக்கிரமித்தால் சிங்களவர்கள் கடலில்தான் போய் விழவேண்டும்.

''இன்னும் இரண்டு வருடங்களில் இந்த நாட்டில் ஒரு சிங்கள மகனையும் காணமுடியாத நிலை ஏற்படும்.

''நாட்டின் இறைமையைப் பாதிக்கும் வகையில் வெளிநாடுகள் தலையிட முயற்சிக்கின்றன. இந்த நிலையில் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது பயனுள்ளதாகவே இருக்கும்.

''நான் இந்தச் சபையில் தொடர்ந்து சுயேச்சை அங்

[6-ம் பக்கம் பார்க்க)

தமிழர் பிரச்னை தீர்க்க சர்வகட்சி மகாநாடு கூட்டுக!

அரசு-கூட்டணி உயர்மட்ட பேச்சு பலனளிக்காது!!

பாராளுமன்றத்தில் 'சரத்' யோசனை

(நமது சபை நிருபர்)

''இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களின் பிரச்னைகளை, எந்தவிதமான பேச்சுவார்த்தைகள் மூலமும் தீர்த்துவிடமுடியாது. தமிழ் மக்களின் பிரச்னைகளை சர்வகட்சி மகாநாட்டின் மூலமே நிரந்தரமாகத் தீர்க்கமுடியும். தமிழ் மக்களின் சகல பிரச்னைகளையும் தீர்த்துவைக்க சகல கட்சிகளையும் கொண்ட வட்டமேசை மகாநாடு கூட்டப்படவேண்டும்.''

இவ்வாறு கலவான தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. சரத் முத்தெட்டுவேகம நேற்று பாராளுமன்றத்தில பேசுகையில் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றம் நேற்றுப் பிற்பகல் பிரதி சபாநாயகர் திரு. நோர்மன் வைத்தியரத்ன தலைமையில் கூடியது.

நாட்டில் இப்பொழுது அமுலில் உள்ள அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடிப்பது சம்பந்தமாக நேற்று பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றது.

தமிழர் பிரச்னை

இலங்கைத் தமிழர் பிரச்னை பற்றி திரு. சரத் முத்தெட்டுவேகம சுருக்கமாக உரையாற்றி அரசுக்கு ஒரு கோரிக்கையும் விடுத்தார்.

''ஐக்கிய தேசியக் கட்சி உயர்மட்டத்திலும் தமிழர் விடுதலைக் கூட்டணி உயர் மட்டத்திலும் இப்பொழுது பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன.

''பேச்சுவார்த்தைகள் மூலம் தமிழர் பிரச்னைகளை ஒருபோதும் தீர்க்க முடியாது.

ஐ. தே. கட்சி விஞ்ஞாபனத்தில்...

''கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில்; ''ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால், தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்த்துவைக்க சர்வ கட்சி மகாநாடு கூட்டப்படும்'' என்று உறுதியளிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் இது நிறைவேற்றப்படவில்லை

''தமிழர்களின் பிரச்னைகள் அவசரமாகத் தீர்க்கப்பட வேண்டும்.

பேச்சுவார்த்தை வேண்டாம்

''தமிழர்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கப்போவதாகக் கூறி இதுவரை நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தை

[6ம் பக்கம் பார்க்க]

சர்வ கட்சி யோசனை:

பிரதமர் கருத்து

[கொழும்பு]

கலவான எம். பி. திரு. சரத் முத்தெட்டுவேகம, சபையில் தெரிவித்த சர்வ கட்சி மகாநாடு யோசனை பற்றி, பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா பாராளுமன்றத்தில் நேற்று பதிலளிக்கையில்; ''புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டபோது தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் சகல கட்சிகளுக்கும் நாம் அழைப்புவிடுத்திருந்தோம் ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி எமது கோரிக்கையை ஏற்கவில்லை'' என்று கூறினர்.

''கடந்த பொதுத் தேர்தலில் எமது கட்சி விஞ்ஞாபனத்தில் தமிழர் பிரச்னையைத் தீர்த்துவைக்க சர்வகட்சி மகாநாட்டைக் கூட்டுவோம் என்று தெரிவித்திருந்தது உண்மைதான். ஆனால், தேர்தலுக்குப் பின்னர் சர்வ கட்சிகளும் பாராளுமன்றத்துக்குவரவில்லை இதன் காரணமாக சர்வ கட்சி மகாநாடு கூட்டும் யோசனை கைகூடவில்லை'' என்று தெரிவித்த பிரதமர்.

''தமிழர் விடுதலைக்கூட்டணி தெரிவித்த சில கருத்துக்களைத் தொடர்ந்து இப்பொழுது உயர்மட்டப்பேச்சுக்கள் நடைபெற்றுவருகின்றன, இதில் ஒன்றும் இரகசியம்இல்லை. இப்பேச்சுக்களைத்தொடர்ந்து சில நடவடிக்கைகளை மேற்கொள்வோம் அந்தநேரத்தில் எல்லா விபரங்களும் சபைக்குத் தெரிவிக்கப்படும்'' என்று கூறினர். [ம]

'அமிர்' மீதான பேச்சுக்கள்:

எம். பிக்கள் சபையில் வருத்தம் தெரிவித்தனர்

[கொழும்பு]

குண்டசாலை எம். பி. திரு. டி. எம்- சந்திரபால, பொல்காவலை எம். பி. திரு. சுனில் ரஞ்சன் ஜெயக்கொடி, நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் திரு. ஜே. எம். பிரேமச்சந்திரா ஆகிய மூவரும், எதிர்க்கட்சித் தலைவர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தின்போது நிகழ்த்திய பேச்சுக்களின் சில பகுதிகளை தாங்கள் வாபஸ்பெறுவதாக நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தனர்.

இதுசம்பந்தமாக குண்டசாலை எம். பி. திரு. டி. எம் சந்திரபால சபையில் நேற்றுப் பேசுகையில்; ''கடந்த ஜூலை மாதம் 24ம் திகதி எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தின்போது நான் நிகழ்த்திய பேச்சின் சில வரிகளை இப்பொழுது வாபஸ் பெற்றுக்கொள்கின்றேன். இந்தப்பேச்சுக் காரணமாக எவருக்காவது மனவருத்தம் ஏற்பட்டிருந்தால் அதற்காக நான் மிகவும் மனவருத்தம் அடைகின்றேன்'' என்று தெரிவித்தார்.

இதேபோல், மற்றைய இரண்டு எம். பிக்களும் சபையில் வருத்தம் தெரிவித்தனர். [ம]

அவசரகால நிலைமை மேலும் நீடிப்பு

[கொழும்பு]

அமுலில் இருக்கும் அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடிப்பது தொடர்பாகக் கொண்டுவரப்பட்ட பிரேரணை மீது நேற்று பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றது.

விவாதத்தில் கலந்துகொண்டு, கலவான எம். பி. திரு. சரத் முத்தெட்டுவேகம பேசுகையில்; ''அவசர காலச் சட்டத்தைப் பயன்படுத்தி எதிர்க்கட்சிகளின் உரிமைகளை அரசு பறிக்கிறது'' என்று கண்டித்தார்.

''இச்சட்டத்தை அரசு துஷ்பிரயோகம் செய்கிறது. எதிர்

[6ம் பக்கம் பார்க்க]

சென்னையில் இன்று ஹர்த்தால்

சென்னை, செப், 24

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதியை விடுதலை செய்யுமாறு கோரி நாளை வெள்ளிக்கிழமை சென்னையில் ஹர்த்தால் நடைபெறும். ஹர்த்தாலை அனைத்துக் கல்லூரி மாணவர்கள் நடத்துகிறார்கள்.

வல்லைவெளி மூவர் கொலை சம்பவம்

'நான் பஸ்ஸை மறித்தேன் சிவராசா வெடிவைத்தார்''

மாங்குளத்தில் பிடிபட்டவர் பொலிசில் வாக்குமூலம்

(புலோலி நிருபர் திருச்செல்வமும் உடுப்பிட்டி நிருபர் சுபேந்திரனும்)

''ஒட்டுமடத்திலுள்ள அப்போதிக்கரியின் வீட்டிலிருந்தே நானும், அழகேஸ்வரன், தங்கேஸ்வரன், இலங்கேஸ்வரன், தம்பர், சிவராசா, இராசா, செல்வம் ஆகியோரும் இச்சம்பவத்திற்கான திட்டத்தைத் தீட்டினோம். சம்பவ இடத்திற்கு பஸ் வந்ததும் நான் பஸ்ஸை மறிக்க சிவராசா பஸ்ஸுக்கு வெடிவைத்தார். தொண்டமானாற்றச் சந்தியில் நின்ற ஸ்ரீ என்பவரிடம் சம்பவத்திற்குப் பாவித்த ஆயுதங்களைச் சாக்கில் கட்டி ஒப்படைத்தோம்.''

இவ்வாறு வல்வெட்டித்துறைப் பொலிசாரினால் வல்லைவெளி முக்கொலை வழக்குச் சம்பந்தமாக மாங்குளம் பொலிஸ் பகுதியிலுள்ள வன்னிக்குளத்தில் வைத்து மடக்கிப்பிடிக்கப்பட்ட செல்லத்துரை ஜெகநாதன் என்பவர் பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார். அவர் பொலிசாருக்கு அளித்தவாக்குமூலத்தில் மேலும் குறிப்பிட்டதாவது!

கடந்த 13ம் திகதி விஸ்வமடுவிலிருந்து இராசாவும் நானும் கார்ச்சாரதியும் சி எல் 7445 இலக்க காரில் சிறுப்பிட்டிக்கு வந்தோம். பின்பு ஒட்டுமடத்திலுள்ள அப்போதிக்கரி ஒருவ

[6-ம் பக்கம் பார்க்க]

இன்று பட்டமளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா இன்று பிற்பகல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வேலையில்லாததால் இளைஞர் ரயில்முன்பாய்ந்து மரணம்

(புலோலி)

வாழ்க்கையில் விரக்தியடைந்த இளைஞர்ஒருவர் ரயில்முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார்!

புலோலியைச் சேர்ந்த எஸ். லோகச்சந்திரன் (25வயது) என்ற இளைஞரே உயிரை மாய்த்துக் கொண்டவராவார் மரண விசாரணை அதிகாரி திரு. எம். எம். யோகலிங்கம் விசாரணை நடத்தினார்.

இறந்தவர் தனக்கு ஒருவேலையும் இல்லையென்று கவலைப்பட்டுக்கொண்டிருந்தாரென்றும், இவருக்குப்பணக்கஷ்டமும் இருந்ததென்றும், சரடிப்போக்கு என்ற இடத்தில், கொழும்பு, யாழ். மெயில் வண்டிமுன் பாய்ந்தாரென்றும் விசாரணையில் கூறப்பட்டது. விசாரணையின்பின் தற்கொலையெனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

(க-ஏ)

சி. இராசேந்திரன் ஜே. பி.
சட்டத்தரணி.

பின்னுறுதிக் கட்டளை
பற்றிய
அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றத்தில்

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற அதிரேசபிள்ளை விநாயகமூர்த்தி அவர்களின் மரணச்சொத்துக்கு மரணசாதனத்துடன் நிர்வாக அதிகாரப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பம் சம்பந்தமான விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணத் தத்துவ வழக்கு இல. 3612/T

விநாயகமூர்த்தி மகள் ஜெசோதி, ஆனைக்கோட்டை.

மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்துக்கு மரணசாதனத்துடன் நிர்வாக அதிகாரப்பத்திரத்தைப் பெறுவதற்காக தொடரப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 2-ம் திகதிக்குமுற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்ற ஆணைப்படி
தா. குலஞானம்,
பதிவாளர்.

1981-ம்ஆண்டுஆவணிமாதம் 14-ந் திகதி.

வரைந்தவர்:
சி. இரசேந்திரன்,
மனுதாரின் சட்டத்தரணி.

1034

பின்னுறுதிக்கட்டளை
பற்றிய
அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட
நீதிமன்றத்தில்

மல்லாகம் என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி சிவநேசன் என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தினதும், உடமைப் பொருள்களினதும் விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் வழக்கு இல. ரீ/94

சின்னத்தம்பி கைம்பெண் வள்ளிப்பிள்ளை, காளிகோயிலடி, மல்லாகம்.

மனுதாரர்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ளஆள்எவரேனும் 1981-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 2-ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனகட்டளை ஆக்கப்படலாகாதென்பதற்குக்காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1981-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 22-ந் திகதி.

நீதிமன்ற கட்டளைப்படி
சு. வ கணேசன்,
பதிவாளர்.

தயாரித்தவர்:
செ. புண்ணியமூர்த்தி,
மனுதாரின் சட்டத்தரணி.

(1042)

'திட்டமிட்டபடிகல்விபோதனை அதிபர்கள் கண்காணிக்க வேண்டும்'

வடமாநில கல்வியதிபதி

(யாழ்ப்பாணம்)

"ஆசிரியர்கள் திட்டமிட்ட படி கல்விப் போதனைகளை நடாத்த வேண்டும். இவற்றை அதிபர்கள் கண்காணிப்புச்செய்ய வேண்டியது அவசியம்" என்று வடமாநிலக்கல்வி அதிபதி திரு. கே. சிவதாசன் யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெற்ற பாடசாலை அதிபர்களுக்கான விசேஷ கூட்டத்தில் வலியுறுத்தினர் பிரஸ்தாப கூட்டத்தில் பின்வரும் அம்சங்களை நடைமுறைப்படுத்துவதில் கூடிய கவனம் செலுத்துமாறும் கல்வி அதிபதி, அதிபர்களைக் கேட்டுள்ளார்,

பாடசாலைத் தவணை ஆரம்ப நாள்முதல் தவணை விடுமுறை வரை மாணவர்கள் சீரான முறையில் கல்வி கற்கத்தக்க முறையில் பாடசாலைகள் நடாத்தப்பட வேண்டும்.

தவணைப் பரீட்சையின்போது மாணவர்கள் முழுநேரமும் பாடசாலையில் செலவிடத்தக்க முறையில் பரீட்சைகள் நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளவேண்டும்.

மாணவர்களிடையே வாசிக்கும் திறனை அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்

மாணவர்கள் ஆய்வு கூடங்களிலும் தொழிற்கூடங்களிலும் பரிசோதனைகள் நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும்.

ஆரம்பக்கல்வியில் ஒன்றிணைந்த பாடத்திட்டம் சிறந்த முறையில் நடைபெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். (உடுப் -அ)

சாவகச்சேரி
நகராட்சி மன்றம்
ஆதனவரி அறிவித்தல்

1931-ம் ஆண்டு 3-ம் கந்தாயத்திற்குரிய ஆதனவரியை இம்மாதம் 30-ந் திகதி நண்பகல் 12-30 மணிக்கு முன்பு செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன், தவறின் இத்திகதிக்குப் பின்பு செலுத்தப்படும் வரியுடன் வதிப்பிட அளவுகளுக்கும் வெற்றுக் காணிகளுக்கும் பதினைந்து வீதமும் (15%) ஏனைய ஆதனங்களுக்கு இருபது வீதமும் (20%) கூடுதலாகச் சேர்த்து அறவிடப்படும்.

1981-ம் ஆண்டின் 4-ம் கந்தாயத்திற்குரிய வரியை அக்டோபர் மாத முடிவுக்குள் செலுத்தப்படின் 5% வீத வரிக்கழிவு வழங்கப்படும்.

த. நவரத்தினராசா,
செயலாளர்,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி

நகராட்சி மன்ற அலுவலகம்,
சாவகச்சேரி,
22-9-1981. (1047)

திரு. செல்லப்பா பொன்னையா அவர்களின்

அந்தியேட்டிக்கிரியை அழைப்பு

தோற்றம்: 18-08-1904 மறைவு: 27-08-1981

நிகழும் துர்மதி வருஷம் புரட்டாசி மாதம் 10-ந் திகதி (26-9-81 சனிக்கிழமை எல்லோருக்கும் அன்பரும் எமது அன்புத் தந்தையுமாகிய திரு. செல்லப்பா பொன்னையா அவர்களின் அந்தியேட்டிக்கிரியை அழகொல்லை, அளவெட்டி இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி நாகம்மா பொன்னையா (மனைவி)
பொ. இலங்கையர் (மகன்)
(உள்நாட்டிறைவரித் திணைக்களம், யாழ்ப்பாணம்)
பொ. பரமேஸ்வரன் (மகன்)
(சுங்க இலாகா, காங்கேசன்துறை)
பொ. மகேஸ்வரன் (மகன்) (கட்டிட இலாகா, கல்முனை)
க. சண்முகசுந்தரம் (மருமகன்)
(ஒய்வு பெற்ற அரசாங்க ஊழியர்)
இ. சிறீதரன் (மருமகன்)
(உரிமையாளர், பரமானந்த அரிசி ஆலை, தாவடி)
செல்வி இராசேஸ்வரி (மகள்)

(1048)

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

றேடியோ - டெலிவிஷன், ஏயர் கொண்டிசனிங், வெல்டிங் மூன்றுமாத டிப்ளோமா பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம் 4-10-81 அனைவரும் சேரலாம் நாஷனல் அக்கடமி. மொரம்சாக் கட்டிடம் ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். (1020)

யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் பிரதான வீதியில் வீடு, வளவு விற்பனைக்குண்டு 27-9-81 மாலை 2 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் தான் விலை தீர்மானிக்கப்படும். தொடர்பு கொள்ளவும்: P. சிவராசா 417, K K. S. வீதி, சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம் 1045

குரும்பசிட்டியில் வவுனதம்பை ரோட்டில் இரண்டு பரப்புக் காணியுடன் கல்வீடு விற்பனைக்குண்டு விபரங்கட்கு: அம்பாள் அக்கடமி, வல்லை ரோட், அச்சுவேலி. (1051)

பயிற்சி

வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், வயறிங் வகுப்புக்கள் (செய்முறையுடன்) ஆரம்பம்: C. E T. யாழ்ப்பாணம் கல்வி நிலையம். (சாந்தி சினிமாவிற்கு முன்) 22, ராமநாத செட்டியார் வீதி, யாழ்ப்பாணம். 1026

தேவை

அரிசி, மிளகாய், மாவு அரைக்கும் மில்கள் 10/H/P மோட்டர்கள் தேவை விபரங்கட்கு தொடர்பு கொள்ளவும். லங்கா சேவிங் ஸ்டேசன், மருதனார்மடம், சுன்னாகம். 1025

நாட்டிய நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ சண்முகானந்த பரதநாட்டியப்பள்ளி நலன்புரிசபை அளிக்கும் 2வது "சதங்கைநாதம்" நாட்டிய நிகழ்ச்சி, யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் இம்மாதம் 26ம் தேதி மாலை நடைபெறவிருக்கிறது.

பிரதம விருந்தினராக அகில இலங்கை சேக்கிழார் மன்ற தலைவர் திரு. க. சோமசுந்தரம் கலந்துகொள்வார். (ஈ)

மீண்டும் வந்துள்ளது

Pilot
BALL POINT

பைலட்
மத்தியதர
போல் பாயின்ட்

சிறப்பான எழுத்திற்கு
உகந்த பைலட்
எங்கும் பெற்றுக்கொள்ளலாம்

ரூ. 1/75

விற்பனையாளர்: ஷோ வொலஸ் அன்ட் ஹெஜஸ் கொழும்பு 3. டெலிபோன்:- 20671 - 9

SRI COMMUNICATIONS

மணிவாக்கு

எந்த நாட்டையும், எந்த ஊரையும் உன்நாடும் உன்ஊரும் ஆக்குவது கல்வி, ஆதலால் அதனை இறமை கொடுத்து மரணபரியந்தம் விடாமற்கல்.

—ஆறுமுகநாவலர்.

நமது நோக்கு

நாடற்ற 'பிரஜைகள்'

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரின் பிரஜாவுரிமைப் பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வொன்றைக் காணும்வகையில் இலங்கை - இந்திய அரசுகளுக்கிடையில் விரைவில் பேச்சுவார்த்தைகள் நடைபெறவிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

1964ம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கும்வகையிலேயே இந்தப் புதிய பேச்சுவார்த்தைகள் அமையும் என்று தெரிகின்றது.

இதே சமயம் நாட்டிலுள்ள இந்திய இனத்தவர்களான நாடற்றவர்களின் பிரச்னைக்கு முற்றாகத் தீர்வு காணும்வகையிலான ஓர் அறிக்கையினை கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் அமைச்சரவையின் செயலாளர் திரு. ஜி. வி. பி சமரசிங்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜேனரல் சி. ஏ. தர்மபால ஆகியோரைக் கொண்ட மூவர்குழு அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளது. இந்தக்குழுவின் ஆலோசனைகளின்படி அரசு எடுக்கும் நடவடிக்கைகள் நாடற்றவரின் பிரச்னைக்கு இறுதியான ஒரு முடிவை ஏற்படுத்தும் என்று திரு. தொண்டமான் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

1964-ம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி 3,75000 பேரை இலங்கைப் பிரஜைகளாக ஏற்றுக் கொள்வதென்றும் 6,25,000 பேருக்கு இந்திய பிரஜாவுரிமை வழங்கி இந்தியாவுக்கு அழைத்துக் கொள்வதென்றும் இரு அரசுகளும் ஒப்புக்கொண்டன. எஞ்சியுள்ள நாடற்றவர்களின் எதிர்காலம் பற்றி குறித்த ஒரு காலகட்டத்தில் இருதரப்பினரும் கூடிப் பேசி முடிவெடுப்பது என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது. இதன்படி ஏற்கனவே சிலபேச்சுவார்த்தைகள் நடைபெற்றிருந்த போதிலும் தீர்க்கமான எந்தமுடிவும் எடுக்கப்படவில்லை

உடல் உழைப்பினால் நாட்டின் அபிவிருத்திக்குப் பெரும்பங்கினையளித்து வரும் தோட்டத்துறையைச் சேர்ந்த இந்திய இனத்தவர்களின் பிரஜாவுரிமையில் என்று கைவைக்கப்பட்டதோ அன்றிலிருந்தே இந்த நாட்டின் சகலதுறைகளிலும பல்வேறு பிரச்னைகள் முளைத்துக்கிளம்ப ஆரம்பித்தன. இனரீதியிலான உணர்ச்சிகள் வளரவும், பொருளாதாரம் க்ஷீணிக்கவும் இது வழிவகுத்தது.

இதன் விளைவை இன்று நாம் கண்கூடாகக் கண்டும் அனுபவித்தும் வேதனையுறுகின்றோம். என்றாலும் இத்தக் கட்டத்திலாகுதல் நிலைமைகளைச் சரியாகப் புரிந்துகொண்டு பிரச்னைகளை உரிய முறையில் அணுகி தீர்க்கமான முடிவுகளுக்கு வழிகோலும்வகையில் இந்த அரசு முயற்சிகளில் ஈடுபட்டிருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது.

இலங்கைக்குச் சர்வஜன வாக்குரிமை கிடைத்த 50வது ஆண்டு நிறைவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்தவேளையில் நாடற்றவர்கள் ஒன்று ஒரு பிரிவினரும் இங்கே வாழ்ந்து கொண்டிருப்பது அவமானமாகும். இந்தப் பிரச்னைக்கு எவ்வளவு விரைவில் முடிவு காணப்படுகின்றதோ அந்த அளவுக்குத்தான் நாம் சர்வஜன வாக்குரிமை பெற்றதைக் கொண்டாடுவதில் அர்த்தம் இருக்கமுடியும்

தவளைக் காசு

''புலிக்குப் புல்லு வாங்கிப் போட்டது, ஆனைக்கு அல்வா வாங்கிப் போட்டது'' என்று ஒரு சர்க்கஸ் கம்பனி மனேஜர் கணக்கு எழுதினாராம்.

விஞ்ஞான ஆசிரியர்கள் சமர்ப்பிக்கும் 'வவுச்சர்'களில் தவளை, எலி போன்ற பிராணிகளை வாங்கியதற்காகக் கொடுக்கும் கணக்குகளில் விலைகளை அதிகமாகக் காட்டிப் பணம்பெற்று விடுகிறார்களென்று கல்வி அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டியதாக வெளிவந்த செய்தியைப் பார்த்ததும் மேற்கண்ட 'சர்க்கஸ்' மனேஜரின் கணக்கு சாகஸம்தான் நினைவுக்கு வருகின்றது.

விஞ்ஞான ஆசிரியர்களுக்குத் தேவையான தவளை, எலி போன்றவற்றைக் கல்வி இலாகாவே பிடித்துவழங்கினால் இப்படிக் குறை கூற நேராது. படிப்பிப்பதை நிறுத்திவிட்டு ஆசிரியர்களே தவளை பிடிக்கவும், எலிபிடிக்கவும் போகலாமென்று யாரும் யோசனை கூறினால் கூட இந்தக் காலத்தில் ஆச்சரியப்படமுடியாது. ஆனால் தவளைகளும், எலிகளும் நாம் நினைப்பதுபோல் அவ்வளவு இலகுவில் மாட்டிக் கொண்டுவிடாது. அவைகளுக்கும் காசின் அருமை தெரிந்திருக்கிறது போலும்.

பாராட்டுச்சான்றிதழ்களை

டாக்டர் ஒஸ்வின் வழங்குவார்

[பண்டத்தரிப்பு]

நல்லூர் கந்தசுவாமிகோவில் வருடாந்த உற்சவ காலத்தின் போது யாழ் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு முதலுதவிச் சிகிச்சை நிலையத்தின் மூலம் பக்தர்களுக்கும் பொது மக்களுக்கும் ஆற்றிய பணிகளை பெரிதும் பாராட்டி யாழ். மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா சான்றிதழ்களை படையின் யாழ் மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பிக்கு அனுப்பிவைத்துள்ளார்.

மேற்படி முதலுதவிச் சிகிச்சை நிலையத்தில் கடமையாற்றிய தொண்டர்களுக்கு கொழும்பிலுள்ள சென்.

[6-ம் பக்கம் பார்க்க]

இன்று

யாழ். பல்கலைக்கழகத்தின் 2-வது பட்டமளிப்புவிழா

பேராசிரியர் கா. இந்திரபாலா

இன்று பிற்பகல் இரண்டாவது முறையாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது பட்டமளிப்பு விழாவினை நடத்தவுள்ளது. இந்த இளம் பல்கலைக்கழகத்தின் உறுதியான வளர்ச்சியை வெளியுலகுக்கு இவ்விழா அறிவித்துநிற்கும்.

விழாக்கள் என்பன தனி மனிதர்களுடைய வாழ்க்கையிற்போல், நிறுவனங்களுடைய வாழ்க்கையிலும் இன்றியமையாத அம்சங்களாக இருப்பது இயல்பே. ஒரு பல்கலைக்கழகத்தின் வாழ்க்கையில் முக்கியமான ஒரு விழா அதன் பட்டமளிப்பு விழாவாகும். இதனை வீணான ஓர் ஆடம்பர நிகழ்ச்சி என்று எவரும் கருதினால் அது சரியாகாது. பல்கலைக்கழகம் பிறருக்காகவோ, பொதுமக்கள் கலந்துகொள்வதற்காகவோ இந்த விழாவை நடத்துவதில்லை. உண்மையில் பல்கலைக்கழகத்து அங்கத்தவர்களும் அவர்களுடன் நெருங்கிய முறையில் சம்பந்தப்பட்ட சில அதிதிகளும் கலந்துகொள்ளும் ஒரு பிரத்தியேக விழாவே இப்பட்டமளிப்பு விழா. ஆண்டுதோறும் படிப்பை முடித்துப்பட்டம் பெற்றுச்செல்லும் மாணவர்க்கும் பல்கலைக்கழகம் கௌரவிக்க விரும்பும் ஒருசில பேரறிஞர்க்கும் சம்பிரதாய முறைப்படி பட்டங்களைவழங்குவதற்கே இவ்விழா நடைபெறுகின்றது. மேலைத்தேச மரபிலும் கீழைத்தேச மரபிலும் முறைப்படி கல்வி பயின்று செல்வோர்க்குப் பட்டங்கள் வழங்குவது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு மரபாக இருந்து வந்துள்ளது.

இந்த ஆண்டு கலைப்பீடத்திலும் விஞ்ஞான பீடத்திலும் கல்விபயின்று பட்டம் பெற்றவர்களுக்குப் பல்கலைக்கழகத்து வேந்தர் திரு. வே. மாணிக்கவாசகர் பட்டங்களை வழங்குவார். அத்துடன் இந்த ஆண்டு முது கலைமாணிப்பட்டம் பெற்ற நால்வரும் பட்டங்களை வேந்தரிடமிருந்து பெறுவார்கள். இவ்விழாவின் சிறப்பு அம்சமாக அமைவது சர்வதேசப் புகழ்பெற்ற நான்கு அறிஞர்களுக்குக் கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கப்படும் நிகழ்ச்சியாகும்.

இம்முறை கௌரவ கலாநிதிப் பட்டம் பெறுவோர் நான்கு வேறுபட்ட துறைகளில் பெரும் புகழ் ஈட்டியவர்கள் ஆவார்கள். தமிழியல் துறையிலே ஆராய்ச்சிகளை நடத்தி, அத்துறையைச் சர்வதேசத்தன்மை கொண்ட ஒன்றாக மாற்றுவதற்கு உழைத்த காலஞ்சென்ற தனிநாயக அடிகளாருக்கு இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கப்படும். இறந்தபின் வரும் அறிஞர்களைக் கௌரவிப்பது பல்கலைக்கழகங்களின் மரபாகும். யாழ்ப்பாணக் குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவராய், இலங்கைப் பல்கலைக்கழகம், கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகம், சிகாகோ பல்கலைக்கழகம் ஆகியவற்றில் கடமையாற்றி, இப்பொழுது அமெரிக்காவின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களுள் ஒன்றாகிய ஹாவட் பல்கலைக்கழகத்தில் சமூக மானிடவியற் பேராசிரியராக விளங்கும் கலாநிதி ஸ்ரான்லி ஜெயராஜா தம்பையா அவர்களுக்கும் இல

[6-ம் பக்கம் பார்க்க]

மக்கள் கருத்து

கும்பாரம்பம் 29-ம் திகதியே: ஒரு விளக்கம்

எமது அமைப்பு எந்த ஒரு பஞ்சாங்கக்காரரையோ அல்லது வேறு தனிநபரையோ சார்ந்ததல்ல. நாம் நடுநிலை நின்றே ஆய்வு செய்கின்றோம். இலங்கையில் இருந்து வெளிவரும் வாக்கிய பஞ்சாங்கம் நவராத்திரி ஆரம்பம் 28-ந் திகதி திங்கட்கிழமை யென்றும் திருக்கணித பஞ்சாங்கம் 29-ந் திகதி செவ்வாய்க்கிழமை என்றும் பிரசுரித்திருப்பது சைவசமயத்தவரைப் பெரும் குழப்பநிலைக்குள்ளாக்கி விட்டது. எனவே எமது மன்றம் சென்ற 6-9-81 ஞாயிறு கூட்டத்தில் இதுபற்றிய கருத்துக்களைச் சமர்ப்பிக்கும்படி கோரியிருந்தது. அக்கூட்டத்திற்கு பல சைவ சோதிட அறிஞர்களும் சைவக்குருக்கள்மாரும் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்து 29-ந் திகதியே விரதாரம்பம் என வாதிட்டனர். எனவே 13-9-81-ல் கூட்டப்பட்ட விசேஷ சிறப்புக் கூட்டத்தில் 29-9-81 தான் கும்பாரம்பம் செய்யப்பட வேண்டும் என்று இறுதித்தீர்மானம் எடுக்கப்பட்டது. அதற்குரிய ஆதார பூர்வமான விளக்கங்கள் வருமாறு:

(1) 'இனி நவராத்திரி விதியைச் சொல்லுகிறேன். ஆசுவினமாக சுக்கில பக்ஷப் பிரதமை மூதல் நவமி வரை பிரதமை தினத்தில் ஆரம்பித்து விரதம் விழா என்பவைகளைக் கொள்க''- ஸ்ரீமத் பூர்வகாரணாகமம்.

(2) சரசோதி மாலையில் கூறப்படுவதாவது;

''அரிவையிலிரவி சேர்ந்
தைப் பசிப்பிறை
வருபிரதைமுதல் நவமியீற
தாய்
புரவலர் துர்க்கையைப்
பூசை செய்திடில்
இருநிதிக் கிழமைகள் யாவு
மெய்துமே''

—தேவிபுராணம்

''அமாவாசையுடன் சேர்ந்த பிரதமையில் எவன் எனக்கு நவராத்திரிபூசை ஆரம்பிக்கிறானோ அவனுக்கு சாபம் கொடுத்து, சாம்பலாகச் செய்வேன்.''

[6-ம் பக்கம் பார்க்க]

CENTRIC
சென்ட்றிக் விவசாய பம்ப்.



- உலகப் புகழ் றுெபின் பெட்ரல்/மண்ணெண்ணெய் அல்லது யன்மார் டீசல் எஞ்சின் பொருத்தியது.
- நிகர் நிற்க முடியாத எரிபொருட் சிக்கனம். தனித்துவமான தன்னியக்க எரி பொருள் மாற்றும் விசை.
- இடம் மாற்றும் வசதி கொண்ட பாரம் குறைந்தது.
- நிலைத்து நிற்பதற்காக வார்ப்பிரும்பிலும் பித்தளையிலும் உருவானது.
- சென்ட்றிக் - 30 வருடங்களுக்கு மேல் 60,000 பேர் நம்பிப் பாவிப்பது.

விலை: ரூ. 4,750/- முதல்.
1½'', 2'', 3'', 4'' ரகங்களில் கிடைக்கும்.

Mel Ads

ஜினசேன லிமிட்டெட்,
4, உணுப்பிட்டியா வீதி,
கொழும்பு 2.
தொலைபேசி: 26558/9

இராணுவ அதிகாரிகள் தூக்கிலிடப்பட்டதன் எதிரொலி

டாக்காவில் கைகலப்புகள்! கடைகள் சேதம், வாகனங்கள் தீக்கிரை

டாக்கா, செப். 24 கடந்த மே மாதம் பங்களாதேஷ் ஜனாதிபதி ஷியாவுர் ரஹ்மானின் படுகொலைக்குக் காரணமாகவிருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 12 இராணுவ அதிகாரிகள் நேற்று தூக்கிலிடப்பட்டதைத் தொடர்ந்து டாக்காவில் அரசாங்க ஆதரவாளர்களுக்கும், எதிர்த் தரப்பினருக்குமிடையே கைகலப்புக்கள் இடம்பெற்றன.

இக்கைகலப்பின் போது பல கடைகள் சேதத்திற்குள்ளாகின. அரச வாகனங்களுக்கும் தீ வைக்கப்பட்டது.

இக் கைகலப்பில் ஈடுபட்ட கும்பலைக் கலைக்கப் பொலிசார் கண்ணீர்ப்புகைக்குண்டுப் பிரயோகம் செய்தனர்.

பங்களாதேஷில் இத்தகைய வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுபவர்களுக்கெதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று பதில் ஜனாதிபதி ஜனாப் சத்தார் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷில் எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவிருப்பது தெரிந்ததே.

இத்தேர்தலில் பங்களாதேஷின் முன்னாள் ஜனாதிபதியாகவிருந்து சதிப்புரட்சி ஒன்றின் மூலம் படுகொலை செய்யப்பட்ட ஜனாப் ஷேக் முஜிபுர் ரஹ்மானின் மகளும் போட்டியிடவுள்ளார். (வெ)

பஸ் எரிப்பு:

அமைச்சர் கண்டனம்

சென்னை, செப். 24 தமிழ் நாட்டில் அரசியல் போராட்டங்களின் போது பஸ்கள் எரிக்கப்படுவதையும், வன்செயல்கள் இடம்பெறுவதையும் இம் மாநில போக்குவரத்து அமைச்சர் திரு. முத்துச்சாமி கண்டித்துள்ளார்.

இவ்வித சம்பவங்களினால் பாதிக்கப்படுவது பொதுமக்களே என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வெ)

நக்ஸலைட்டுகள் கைது

சென்னை, செப். 24 தர்மபுரி மாவட்டத்தில் ஏழு நக்ஸலைட்டுகள் பொலிசாரினால் நேற்று கைதுசெய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து இரண்டு துப்பாக்கிகள், வெடிமருந்துகள் ஆகியவற்றைப் பொலிசார் கைப்பற்றினர்.

அமெரிக்க— சோவியத் பேச்சுவார்த்தை

நியூயோர்க், செப். 24 அமெரிக்காவிற்கும் சோவியத் யூனியனுக்குமிடையிலான முதல்கட்ட பேச்சுவார்த்தைகள் நேற்று நியூயோர்க்கில் நடைபெற்றது. இப்பேச்சுவார்த்தையில் அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. அலெக்சாண்டர் ஹெய்க். சோவியத் வெளிநாட்டமைச்சர் திரு. குரோமிக்கோவும் கலந்து கொண்டனர்.

இந்திய செயற்கைக் கோள்

புதுடில்லி, செப். 24 அமெரிக்க கென்னடி முனையிலிருந்து இந்திய செயற்கைக்கோள் ஒன்று ராக்கெட் மூலம் அடுத்தவருடம் விண்வெளிக்கு அனுப்பப்படவுள்ளது. (வெ)

மக்கள்கட்சி அறிக்கை

இஸ்லாமாபாத், செப். 24 பாகிஸ்தானில் இராணுவச் சட்டம் நீக்கப்படவேண்டுமென்றும், பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டுமென்றும் கோரி பாகிஸ்தான் மக்கள் கட்சி அறிக்கையொன்றை விடுத்துள்ளது (வெ)

அமைச்சர் மொகமட் சவூதி பயணம்

[கொழும்பு]

சவூதி அரேபியாவிலிருந்து எண்ணை வாங்குவது சம்பந்தமாகவும், இலங்கை - சவூதி எயர் லங்கா விமானசேவையைப் பற்றியும் எயர் லங்கா விமானங்கள் சவூதி அரேபியாவில் இறங்குவது பற்றியும் பேச்சுவார்த்தை மேற்கொள்ள போக்குவரத்து அமைச்சர் ஜனாப் மொகமட் நேற்று சவூதி அரேபியா பயணமாகியுள்ளார். [உ]

மகாவலி படம்

(வேலணை)

திட்டமிடல் அமைச்சினால், யாழ். மாவட்டத்தில் உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவு தோறும் இருநாட்கள் செய்திப் படங்கள் காண்பிக்கப்பட்டுவருகின்றன.

இப்படங்கள், மகாவலி அபிவிருத்தித் திட்டம், வரலாற்று முக்கியம்பெற்ற இடங்கள், குடும்பநலப் பிரசாரம், பாடசாலை ஒழுக்க நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டனவாக அமைந்துள்ளன. [மா]

சாட்டிமாதா கோயில்

முதலுதவி சிகிச்சைநிலையம்

[பண்டத்தரிப்பு]

சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் முதலுதவிச் சிகிச்சை நிலையம் இம்மாதம் 26ம், 27ம் திகதிகளில் மண்கும்பான் சாட்டி மாதா கோவில் உற்சவத்தை முன்னிட்டு அங்கு இயங்கவுள்ளது.

இக்கோவில் உற்சவத்தின் போது திரளும் பெருந்தொகையான பக்தர்களின் நலனை முன்னிட்டு இந்த முதலுதவிச் சிகிச்சை நிலையம் திறக்கப்படவுள்ளதாக படையின் யாழ். மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுந்தரன் இன்னாசித்தம்பி தெரிவித்தார்.

சந்தேக நபர் கைது

(சாவகச்சேரி)

மிருசுவில் புகையிரதநிலையத்திற்கு முன்பாக ஈச்சமோட்டையைச்சேர்ந்த லொறிச்சாரதி பத்மநாதன் படுகொலை தொடர்பாக அந்தோனிப்பிள்ளை புவனேந்திரன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரை சாவகச்சேரி பொலிசார் கைதுசெய்து சாவகச்சேரி நீதிபதி திரு. சீ. விக்கினேஸ்வரன் முன்னிலையில் ஆஜர்செய்த போது, சந்தேகநபரை இம்மாதம் 29ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார். (வெ)

சிரமதானம்

(துணுக்காய்)

மல்லாவி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட விளையாட்டுமைதான காணியில் சிரமதான வேலைகள் நடைபெற்றுவருகின்றன. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் கிராமத் தொண்டர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து இந்த சிரமதான வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர். காணியிலுள்ள காடுகள், பற்றைகள் வெட்டி துப்பரவு செய்து விளையாட்டு மைதானம் செப்பனிடப்பட்டுத் திருத்தியமைக்கப்பட்டுவருகின்றது (அ)

உங்கள் சவாரிக்கு சிங்கர்

சவாரிக்குச் சிறந்ததோர் சைக்கிள் சிங்கர்

TEAM

சிங்கர் சைக்கிள்

[illegible] நீங்கள் [illegible] ஓடுவதற்கு [illegible] தெரு [illegible] சரி, [illegible] பாதை [illegible] சரி, [illegible] சரி, [illegible] உறுதியான சிங்கர் [illegible] ஓடுகிறது.

[illegible] உருவான [illegible] உழைக்கின்றது.

[illegible] சேவையுண்டு.

சிங்கர் சிறப்பம்சங்கள்:

- உயர்தர உருக்குக் குழாய்ச் சட்டம்.
- அழுத்தி உருட்டிய உருக்கு அலகிலான கம்பிகள்
- குறைந்தபட்சம் 1800 இறாத்தல் தாங்கக்கூடிய சங்கிலி.
- நீடித்த பாவனைக்கும் இதமான சவாரிக்கும் குரோம் முலாமிடப்பட்ட போல் பெயாரிங்.
- அதி உயர்ந்த வெப்ப நிலையில் தடவப்பட்ட இரு பூச்சு இனாமல் நிக்கல் முலாமிடப்பட்ட [illegible]

சகல சிங்கர் காட்சியறைகளிலும் கிடைக்கும்

சிங்கர் (ஸ்ரீ லங்கா)
லிமிட்டெட்,
83, சதாம் வீதி, கொழும்பு - 1. தொலைபேசி: 21461

சிங்கர் சைக்கிள் —சிங்கரின் பாரம்பரிய சிறப்பியல்புகளைக் கொண்டது.

விலை ரூபா 1,075/- (லகேஜ் இல்லாதது) இலகு தவணைக் கட்டண வசதியுண்டு.

மீன் பிடிப்பதற்கு புதுவித படகுகள்

அமைச்சர் ஆலோசனை

(கொழும்பு)

காற்றிலிருந்து மின்சாரம் பெற்று இயங்கும், மீன்பிடிப் படகுகள் வெகுவிரைவில் பாவனைக்கு வரவிருக்கின்றன. இது பற்றிய தகவலை மீன்பிடி அமைச்சர் திரு. பெரேரா தெரிவித்துள்ளார்.

இது பற்றி விளக்கிய அமைச்சர் இவை போன்ற படகுகள் நியூஸிலாந்தில் பாவனையில் இருப்பதாகவும் இதன்மூலம் பிடிக்கப்படும் மீன்களின் அளவு கணிசமாக அதிகரித்திருப்பதுடன் எண்ணெய்ப்பாவனையையும் நியூஸிலாந்து நாட்டவர் கட்டுப்படுத்தியிருக்கின்றார்கள் எனவும் தெரிவித்தார்.

அமைச்சரது இப்புதிய முறையிலான படகு அமைக்கும் திட்டத்தினை ஆராய்ந்து மேல் நடவடிக்கைகளையெடுக்கவென கலாநிதி ஏ. என். எஸ். குலசிங்க தலைமையிலான தேசிய பொறியியல் ஆராய்ச்சி, அபிவிருத்திப்பிரிவினர், ஆய்வுகளை நடாத்தி வருகின்றனர். (இ)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30
எம். ஜி. ஆர்
சரோஜாதேவி
அரசகட்டளை

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-ஸ்ரீதேவி
பட்டாக்கத்தி
பைரவன்

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்-லட்சுமி
அவன்- அவள்
அது (ஈஸ்ட்மன்கலர்)

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
அலாவுதீனும்
அற்புதவிளக்கும்

REGAL ரீகல் Daily 5 Shows
"ஜங்கிள் புக்"
காட்சி நேரம்: 10-30, 2-15, 4-40, 7-00, 9-30

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-15, 6-15, 9-30
சிவாஜி - சரோஜாதேவி
ஆலயமணி

WINDSOR JAFFNA
Daily at 10-30 a.m., 2.00, 4-30, 7-00 & 9-30 p.m. only
SEAN CONNERY & CANDICE BERGEN
in
"The Wind and The Lion"
(Color—Cinemascope)

29-9-81 TO 1-10-81
Richard Dreyfusjaws Fame
Good Bye Girls
(Academic Award Love Story) (Color)

மனோகரா (யாழ்ப்பாணம்) 25-27-81வரை
தினசரி 10-30, 2-30, 4-45
7-00, 9-30
SMOKEY AND THE BANDIT

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சுதாகர், பாக்கியராஜ் சுமதி
மற்றும் பலர் நடித்த
சுவர் இல்லாத சித்திரங்கள்

6 வது வாரம்
ஸ்ரீதர் (யாழ்நகர்) தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
மஞ்சுபார்கவி ... துளசிராம்
சங்கராபரணம் (கலர்)

சாந்தி 2வதுபரபரப்பூட்டும்ஹவுஸ்புல் வாரம்
(யாழ் நகர்) 10-30, 2-30, 6-15&9-45
கமல்...
ஸ்ரீதேவி...
குரு
நம்பியார்
வெண்ணிறஆடை
நிர்மலா- முத்துராமன்-
சுந்தரராஜன்
தென்னகத்தில் மிகுந்த பரபரப்பூட்டிய வண்ண ஓவியம்

விளையாட்டுச் செய்திகள்

பாகிஸ்தானில் சுற்றுப்பயணத்தை ஆரம்பித்துள்ள ரோகன் கன்காய் தலைமையிலான சர்வதேசக் கிரிக்கெட் அணி தனது முதலாவது போட்டியின் முதல் ஆட்டத்தில் ஒன்பது விக்கட் இழப்பிற்கு 320 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அங்கம் வகிக்கும் ஒரே இலங்கையரான '[illegible] மெண்டிஸ்' ஆட்டமிழக்காது 116 ஓட்டங்களைப் பெற்றது இவ்வாட்டத்தின் சிறப்பம்சமாகும். இக்குழுவில் மேற்கிந்தியா, இங்கிலாந்து இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பல புகழ்பெற்ற வீரர்கள் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

மல்யுத்தப் பயிற்சி

அடுத்த சில மாதங்களுள் இலங்கை மல்யுத்த வீரர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக ரஷ்யாவிலிருந்து மல்யுத்தப்பயிற்சி நிபுணர்கள் இங்கு வரவுள்ளனர்.

விளையாட்டுத்துறை அமைச்சும், இலங்கை மல்யுத்தச் சம்மேளனமும் இதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது.

பாரந்தூக்கும் உலக சாதனை

பிரான்ஸில் நடைபெற்ற 35-வது ஐரோப்பிய உலக பாரந்தூக்கும் போட்டியில் பல்கேரியாவைச் சேர்ந்த வாசிலேருசவ் என்பவர் 75 கி. கிராம் எடையைத் தூக்கி உலக சாதனை ஏற்படுத்தியுள்ளார். ஒலிம்பிக் வீரரான இவர் தொடர்ந்து நான்கு தடவைகள் தங்கப்பதக்கம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

ஆசிய விளையாட்டு

1982-ம் ஆண்டிற்கான ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நவம்பர் மாதம் 19-ம் திகதி புதுடில்லியில் ஆரம்பமாகின்றன. இப்போட்டிகளில் முன்னர் இடம்பெறாத 'கைப்பந்தாட்டம்', 'கோல்ப்' ஆகிய விளையாட்டுகள் இம்முறை இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. இவ்விளையாட்டு விழா பற்றிய நிகழ்ச்சிக் கோவைகள் சமீபத்தில் இந்தியா அறிவித்துள்ளது.

ரத்தினம்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்- ஜமுனா
குழந்தையும் தெய்வமும்

இன்றைய பலன்

புரட்டாசி மாதம் 9 ம் திகதி
வெள்ளிக்கிழமை
(25 - 9 - 81)

மேடம்: உறவினர்களின் வருகை உங்களுக்கு உவகையைத்தரும். சுற்றுவட்டாரத்தில் மதிப்புஉயர்வுதரும் குடும்பத்தில் கணவன் - மனைவி உறவு மிகவும் சுமுகமாக இருக்கும்.

இடபம்: ஆயுதபீடைக்கு இடமுண்டு. எனவே எதிலும் அவதானம் விரும்பத்தக்கது. அவசரப்போக்கு விபரீதங்களுக்கு இடமளிக்கலாம் தெய்வநம்பிக்கையுடன் சமயோசித புத்தியும் வேண்டும்.

மிதுனம்: இல்லத்தில் இனிமை தவழும். வெளியிடத்துத் தொடர்புகள் பெருகும். இனசனங்கள் உதவியுடன் செல்வாக்கு உயரும்.

கடகம்: புதியதொ[illegible] தலைதூக்கும். வணிகர்கள் வாழ்க்கை சோதனை நிறைந்ததாக இருக்கும். மாணவர்கள் உணர்ச்சிவசப்படாது இருத்தல் நன்று.

சிம்மம்: பரோபகார சிந்தை மேவிடும். பொதுப்பணிபுரிவதில் ஆர்வம் பிறக்கும் மதத்தலைவர் ஒருவர் நல்லாசி வழங்குவார். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையினால் நல்லபெயரும் கிடைக்கும்.

கன்னி: வாழ்க்கையில் வசதிகள் பெருகும். கற்றதனால் பயன் இன்று கண்டிப்பாக கிடைக்கும் செய்தொழிலில் புதிய உத்திகளைக் கையாளுவீர்கள். சிறப்பான இடமாற்றம் ஏற்படலாம்.

துலாம்: இலாபகரமான தினம், பொருள் வரவுக்கு இடமுண்டு. பெரியவர்களின் ஆசி அவசியம் கண்டு, போட்டா போட்டிகளில் வெற்றி உங்கள் பக்கம் இருக்கும். விளையாட்டு வீரர்களாயின் முதலிடத்தை பெறுவர்.

விருச்சிகம்: பலவழிகளிலும் பணம் செலவாகும். நண்பர்கள் சகவாசத்தில் சிக்கலில் மாட்டிக்கொள்ள நேரிடும் நடுநிலைமை நன்று.

தனு: குமுறும் நெஞ்சத்துடன் நாளைக் கடத்துவீர்கள் எதிலும் அவசரமுடிவை தவிர்த்துக்கொள்ளவும் உடல் நலத்தில் அதிகவனம் செலுத்தவும் பிரயாணத்தைத் தவிர்த்தல் நன்று.

மகரம்: முத்தான சந்திப்பு ஒன்று கிடைக்கும், முதியவர் ஒருவரின் ஆதரவும் கிடைக்கும், சாஸ்திர வழியாலும் மகிழ்ச்சிகிட்டவுண்டு.

கும்பம்: ஆசாரக்குறைவான சம்பவங்கள் இடம்பெறும், உடல்நலத்தில் அதிக கவனம் செலுத்தவும், குடும்பத்தில் சிறிய பூசல்கள் தோன்றி மறையலாம், கொடுக்கல் வாங்கல்களை இன்று தவிர்த்துக்கொள்ளவும்.

மீனம்: நீண்டநாள் தலையிடி கொடுத்த ஒரு பிரச்சினை இன்று நல்ல முடிவுக்கு வரும். சிலர்க்கு புதிய வாகனத்தில் முதலீடு செய்யவும் சந்தர்ப்பம் ஏற்படும், நல்லநாள்.

சோதிட கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

15லட்சம் ரூபா செலவில் சித்திரத் தேர்

(புலோலி)

சரித்திரப் பிரசித்திபெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகனுக்கு புதிய சித்திரத்தேரொன்று உருவாக்கப்பட்டுவருகின்றது.

சுமார் 15 இலட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்டுவரும் இச்சித்திரத்தேர் 4' அடி உயரத்தைக்கொண்டது.

நோய் தாங்காமல் தற்கொலை

(மாவிட்டபுரம்)

தனிமையில் வாழ்ந்த 74 வயது வயோதிபரொருவர் தொய்வு நோயின் கொடுமையால் நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

அளவெட்டியைச் சேர்ந்த இன்னட்டிசரவணையே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவராவார்.

குடும்பத்தைப் பிரிந்து தனியே வாழ்ந்துவந்த இவர் தொய்வு நோயால் அவஸ்தைபட்டு வந்தாரெனவும் அதன் காரணமாக மனமுடைந்து நஞ்சருந்தினாரெனவும் மரணவிசாரணையில் தெரியவந்தது.

மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கினார்.

ஜேப்படி குற்றத்தை ஒப்புக்கொண்டார்

(புலோலி)

ஆலய வழிபாட்டிற்குச் சென்ற பக்தர் ஒருவரிடம் ஜேப்படி செய்த இளைஞரொருவர் வகையாகச் சிக்கிக்கொண்டார்.

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய தரிசனத்திற்குச் சென்ற புலோலி தெற்கைச்சேர்ந்த தவராசா கந்தையா என்பவரிடம் ஆலய வீதியில்வைத்து 87/-ரூபா பணத்தை ஜேப்படி செய்த இளைஞரொருவர் அகப்பட்டுக்கொண்டார்.

சந்தேக நபரான சோ. உதயகுமார் என்பவர் பருத்தித்துறைப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார் பொலிசார் இச்சந்தேகநபரை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு கே. எஸ் மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து கைவிரல் அடையாளத்தைப் பதிவுசெய்ய உத்தரவிட்ட நீதவான் தண்டனை வழங்குவதை ஒத்திவைத்தார். (க)

ஸ்ரீஇராமகிருஷ்ண ஜெயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாசிரமத்தின் ஆதரவில் நாளை சனிக்கிழமை பிற்பகல் ஸ்ரீ இராமகிருஷ்ண ஜெயந்தி விழா கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

திரு. ஆ. தட்சணாமூர்த்தி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வேந்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சிறப்புரை ஆற்றுவார்.

நவீன பஸ் நிலையம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் இரண்டரை லட்ச ரூபா செலவில் நவீன பஸ் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது பழைய பஸ் தரிப்புகள் எல்லாம் உடைக்கப்பட்டு வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

போட்டியின்றித் தெரிவு

(புலோலி)

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பன்னிரண்டு கிளைக்குழுக்களில் பதினொரு கிளைக்குழுக்களின் உறுப்பினர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இப்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளைக்குழுத் தேர்தல்களுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் நடைபெற்ற போது புலோலி பெரிய [illegible] கிளை தவிர்ந்த ஏனைய கிளைகளுக்கான கிளைக்குழு உறுப்பினர்கள் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டனர்.

''துணிவும் ஆழ்ந்த சட்ட அறிவும் கொண்ட நீதிபதியாக திகழ்ந்தார்!

மறைந்த ரி. ஜே. ராஜரட்ணத்திற்கு மாவட்ட நீதிபதி அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

'காலஞ்சென்ற இளைப்பாறிய மேல்நீதிமன்ற நீதிபதி திரு. ரி. ஜே. இராஜரட்ணத்தின் மறைவு. நீதித்துறையினரையும் அவரது அன்பு நண்பர்களையும் ஆழ்ந்தவேதனைக்குள்ளாக்கியுள்ளது'' என்று யாழ் மாவட்ட நீதிபதி திரு. இ. பாலகிட்ணர் முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி திரு. ரி. ஜே. இராஜரட்ணத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து யாழ் மேல் நீதிமன்றத்தில் நடைபெற்ற அனுதாபம் தெரிவிக்கும் வைபவத்தில் உரையாற்றுகையில் கூறினார்,

நேற்று முன்தினம் இடம்பெற்ற இவ்வைபவத்தில் யாழ் மாவட்ட நீதிபதி திரு. இ. பாலகிட்ணர், குடும்ப நீதிமன்றநீதிபதி திரு. டி. ஜேசுரட்ணம், யாழ் நீதிபதி ரி. ஜோகநாதன் ஆகியோருட்பட சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் ததிரு. எஸ். ஆர். கனகநாயகமும், ஏனையசட்டத்தரணிகளும்கலந்து கொண்டனர்.

இவ்வைபவத்தில் உரையாற்றிய நீதிபதி திரு. இ. பாலகிட்ணர் திரு ராஜரட்ணம் யாழ்ப்பாணத்தில் பிரபல சட்டத்தரணியாக விளங்கிய திரு. ரி. எஸ். இராஜரட்ணத்தின் புதல்வனாகப் பிறந்து கண்டி திரித்துவக் கல்லூரி நாட்களில் ரைட்லத்தின் பரிசினை வென்றதுடன், வரலாற்றுப்பாடத்திற்கான 'அந்ரேசனல்' பரிசையும் பெற்றாரெனவும் பின்பு 1948ம் ஆண்டில் சட்டத்தரணியாக நீதித்துறைக்குப் பிரவேசித்தார் எனவும் குறிப்பிட்டார்.

தன் மூதாதையர்களது வழியினைப் பின்பற்றி தான் ஒரு கிறிஸ்தவனான போதிலும் தன் பூதவுடலைத் தகனஞ் செய்யும்படி பணித்த திரு. இராஜரட்ணம் துணிவும்' ஆழ்ந்த சட்ட அறிவும படைத்த நீதிபதியாக விளங்கியதுடன் இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் நீதிபதியாக கடமையாற்றி பலரது மதிப்பினைப் பெற்றிருந்தார் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தில் உரையாற்றிய சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் திரு எஸ். ஆர். கனகநாயகம் தன் உரையில் ஒரு சிறந்த சட்டத்தரணியின் புதல்வனாகப் பிறந்த திரு. இராஜரட்ணம் சிறுவயது முதல் கிறிஸ்தவ மதக்கோட்பாடுகளுக்குட்பட்டு வளர்ந்து வந்தாரெனவும் சிறந்த குற்றப்புலனாய்வுச் சட்டத்தரணியாக விளங்கி பின்பு நீதித்துறையில் நீதிபதியாக பல்வேறு இடங்களிலும் பணியாற்றி யாழ். மாவட்டத்தின் முதல் உயர் நீதிமன்றநீதிபதியாக 1974-ம் ஆண்டில் பதவியேற்றார் எனக்குறிப்பிட்டார்.

சட்டத்தரணிகள் சார்பில் தனது அனுதாபங்களைத் தெரிவித்த திரு கனகநாயகம் நீதிமன்றில் நிறைவேற்றப்பட்ட அனுதாபத்தீர்மானத்தின் பிரதிகளை திரு. ரி. ஜே இராஜரட்ணத்தின் குடும்பத்தவர்க்கு அனுப்பி வைக்குமாறு மாவட்ட நீதிபதியைக் கேட்டுக் கொண்டார் இக்கோரிக்கையை ஏற்ற நீதிபதி இத்தீர்மானங்களை அனுப்பிவைப்பதாக உறுதியளித்தார். [கி]

பயனுள்ள நற்பிரஜைகளாக மாணவர்கள் திகழவேண்டும்

சாவகச்சேரி இந்துக்கல்லூரி பரிசளிப்பு விழாவில் அரச அதிபர்

[சாவகச்சேரி]

'எழுபதைந்து வருடங்களாகப் பயனுள்ள சேவை செய்துள்ள இக்கல்லூரிக்குள் நுழையும்பொழுது இக்கல்லூரியின் வரலாற்றினை நினைந்து பெருமகிழ்ச்சியடைகின்றேன். அதே நேரம் இக்கல்லூரி வளர்ச்சிக்காகத் தனது உடல், பொருள், ஆவி அத்தனையையும் தியாகம் செய்த ஸ்தாபகர் அமரர் தாமோதரம்பிள்ளையையும் பாராட்டுகின்றேன் ''

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடந்த பரிசளிப்புவிழாவுக்குப் பிரதம விருந்தினராக வருகைதந்த, யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் தலைமையில் நடந்த விழாவில் திரு. தேவநேசன் நேசையா தொடர்ந்து குறிப்பிட்டதாவது:

''இக்கல்லூரி யாழ். மாவட்டத்தில்ஒருபெருங்கல்லூரியாக வளர்ந்துவருகிறது. இங்கு ஒரு சிறந்த தரமான நூல்நிலையம் இருப்பது மகிழ்ச்சிக்குரியது. விளையாட்டுத்துறைகளில் இக்கல்லூரி மாணவர்கள் முன்னணியில் நிற்கின்றனர். இக்கல்லூரியில் திறமையாகஇயங்கும் அபிவிருத்திச்சங்கம் சமூகத்திற்கும் ஆசிரியருக்குமிடையே நல்லதொடர்பை ஏற்படுத்திவருகிறது.

''பெரும் சமுதாயம் ஒன்று நன்றாக வளரவேண்டுமானால் பாடசாலையில் மாணவத் தலைவர்களை நல்லமுறையில் இயங்க வைக்கவேண்டும். பரீட்சையில் மாணவர்கள் சித்தியடைந்தால் மாத்திரம் போதாது பல்கலைக்கழகத்திற்கு செல்ல வாய்ப்பில்லாத மாணவர்களுக்கு மாற்றுவழியைக் கையாள வழிகாணவேண்டும்.

''இங்குள்ள இளைஞர்கள் பல்வேறு துறைகளிலும் ஆற்றலையும் அறிவையும் வளர்த்துத் தமக்கும் மற்றையோருக்கும் பயனுள்ள நற்பிரசைகளாக விளங்கவேண்டும்'' என்றார்.

கல்லூரி அதிபரின் அறிக்கையைத் தொடர்ந்து நாடகங்கள், பேச்சுக்கள் நடனங்கள் என்பனஇடம்பெற்றன.

திருமதி இரகுபதி நவரத்தினம் பரிசில் வழங்கினர்.

மிகவும் குறைந்த விமானக் கட்டணத்தில்

- மத்தியகிழக்கு
- சிங்கப்பூர்
- பாரிஸ்
- நைஜீரியா
- லண்டன் ரூபா 7,500-00 (ஒருவழி) ரூபா 14,205-00 (இருவழி)

மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும்
உலகின் எப்பாகத்துக்கும்

- எவ்வித கூடுதல் கட்டணமுமின்றி நீங்கள் விரும்பிய விமானத்தில் பிரயாணஞ் செய்வதற்குரிய

விமான டிக்கட்டுகள்
வங்கியில் அறவிடப்படும் அதே கட்டணத்தில் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பிரயாணக் காசோலைகள்

★ நைஜீரியன் விசா

ஆகியவற்றைக் கொழும்பு செல்லாமல் யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளப் பிரபல்யமான
MACKINNON, MACKENZIE & Co. of CEYLON LIMITEDன்
ஒரேயொரு யாழ்ப்பாணக் கிளையான
எங்களை நாடுங்கள்

மக்கினென்ஸ் ட்றவல் சேவிஸ் [சிலோன்] லிமிட்
8, பருத்தித்துறை வீதி - யாழ்ப்பாணம்.
த. பெ. எண் 92 தொலைபேசி: 8154

பாராட்டு

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

ஜோன்ஸ்படையின் கொமாண்டர் டாக்டர் ஒஸ்வின் பெர்ணாண்டோவைஇங்குஅழைத்து அவர் மூலம் மேற்படி சான்றிதழ்களை வழங்கி அவர்களை மேலும் ஊக்குவிப்பதற்கு யாழ் மாவட்ட ஆணையாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

யாழ்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

இய கலாநிதிப்பட்டம் வழங்கப்படும். அடுத்து, நீண்ட காலமாகப் பேராதனையிலுள்ள பல்கலைக்கழகத்தில் இரசாயனவியல்துறையைக் கட்டியெழுப்புவதில் ஈடுபட்டு, அதன் பேராசிரியராகக் கடமையாற்றிச் சிறந்த ஓர் ஆராய்ச்சி மரபை உருவாக்கி அண்மையில் நைஜீரியாவின் மைடுகுறிப் பல்கலைக்கழகத்துக்குப் பேராசிரியராகச் சென்ற கலாநிதி எம் யு எஸ். சுல்தான்பாவா அவர்களுக்கு விஞ்ஞான கலாநிதிப்பட்டம் வழங்கப்படும். அதேபோன்று, இலங்கையின் தலைசிறந்த கண் வைத்தியர்களுள் ஒருவராகவும் சர்வதேசப்புகழ் பெற்றவராகவும் விளங்கும் டாக்டர் இராமச்சந்திரா பராராஜசேகரம் அவர்களுக்கும் விஞ்ஞான கலாநிதிபட்டம் வழங்கப்படும்.

அவசரகால

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கட்சிகளை நசுக்க இதனைப் பயன்படுத்துகிறது பத்திரிகைத் தணிக்கை, கூட்டங்களை நடத்தத் தடை போன்றவற்றின் மூலம் அரசு பல தந்திரங்களைக் கையாள்கிறது. அரசுக்குள் பிளவு காணப்படுகிறது. விரைவில் ஜனாதிபதி, பொதுத்தேர்தலை நடத்த அரசு திட்டமிடுகிறது. எலிஸபெத் மகாராணி இலங்கை வரும் வரை அவசரகாலச் சட்டம் இங்கு அமுலில் இருக்கும்'' என்றும் திரு. சரத் கூறினார்.

விவாதத்தைத் தொடர்ந்து பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது ஆதரவாக 112 வாக்குகளும், எதிராக 02 வாக்குகளும் கிடைத்தன.

அரசுடன் சேர்ந்து ஹரிஸ்பத்துவ இரண்டாவது எம்.பி திரு. ஆர். பி. விஜயசிறி [சிறிலங்கா சுதந்திரக் கட்சி] ஆதரவாக வாக்களித்தார். திரு. எஸ். டி. பண்டாரநாயக்காவும், திரு. சரத் முத்தெட்டுவேகமவும் எதிர்த்து வாக்களித்தனர். (ம)

தமிழர்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

களோ அல்லது பேச்சுவார்த்தைகள் மூலம் உருவான ஒப்பந்தங்களோ எந்தவித நன்மையும் அளிக்கவில்லை. ஒரு சாரார் பேச்சுவார்த்தைமூலம் தமிழர் பிரச்னைகளைத் தீர்க்க முடியாது.

''இரண்டு கட்சிகளுக்கிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்று அதன்மூலம் வெளியாகும் முடிவை, மற்றைய கட்சிகளும் ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்க்க முடியாது இப்படியான முடிவுகள் குறித்து ஏனைய கட்சிகள் நிச்சயம் பிரச்னைகளை கிளப்பும் இது மட்டுமின்றி, ஐக்கிய தேசியக்கட்சிக்கும், தமிழர் கூட்டணிக்குமிடையே உயர் மட்டத்தில் நடைபெறும் பேச்சுக்களின் முடிவு, யாழ்ப்பாணத்தில் தீவிரவாத இளைஞர்களின் எதிர்ப்பையே சம்பாதிக்கும். அரசுக்கு கூட்டணி விட்டுக்கொடுத்துவிட்டதாக அவர்கள் கருதுவர்கள். சர்வகட்சி மகாநாட்டைகூட்டி, தமிழர் பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வொன்றைக் காணவேண்டும் அரசுக்கும் கூட்டணிக்கு மிடையே பேச்சுவார்த்தை நடைபெறுவது வரவேற்கக் கூடியதொன்றல்ல'' என்று திரு. சரத் முத்தெட்டுவேகம தெரிவித்தார்.

தமிழர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கத்தவனாக இருப்பேன். நான் இன்று புறப்பட்டபோது, என்னுடன் பாராளுமன்றத்துக்கு வர 25,000 பேர் பாணத்துறையிலிருந்து புறப்பட்டனர். நான்தான் தடுத்தேன்'' என்று கூறினார். (ம)

கும்பாரம்பம்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

—தேவிபுராணம்

மேலும் தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் தஞ்சாவூர் மனோன்மணி விலாச துர்மதி வருட சுத்த வாக்கிய பஞ்சாங்கத்திலும், வேலூர் மாயி பஞ்சாங்கத்திலும், கும்பகோணம் சங்கராச்சாரியர் சுவாமிகள் மடத்துப் பஞ்சாங்கத்திலும், சென்னை வாசன் பஞ்சாங்கத்திலும், யாழ்ப்பாணம் திருக்கணித பஞ்சாங்கத்திலும் 29 9-81 செவ்வாய்க்கிழமையே விரதாரம்பம் செய்ய வேண்டுமெனச் சொல்லுகின்றன.

எஸ். சி. எஸ். சிதம்பரநாதன்
பொதுச் செயலாளர்,
இலங்கை
சோதிட ஆய்வு மன்றம்.

கம்பன்விழா இன்றைய நிகழ்ச்சி

[யாழ்ப்பாணம்]

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று மாலை நடைபெறும் கம்பன்விழா 2ம் நாள் நிகழ்ச்சி திரு சி. தியாகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் இரா இராதாகிருஷ்ணன் 'அம்மையார் வாழ்வும் வாக்கும்' [என்னும் பொருள் பற்றி சிறப்புரையாற்றுவார். (மா)

நான்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ரின் வீட்டிற்குச் சென்றோம். அங்கிருந்தே இச்சம்பவம் தொடர்பான திட்டங்களைத் தீட்டினோம்.

அழகேஸ்வரன், தங்கேஸ்வரன், இலங்கேஸ்வரன், தம்பர், சிவராசா, இராசா, செல்வம் ஆகியோருடனேயே இத்திட்டம் அப்போதிக்கரி வீட்டில தீட்டப்பட்டது.

கடந்த 17-ம் திகதி பிற்பகல் கம்பர் மலைக்கு வந்தோம். ஆயுதங்களை எடுத்துச்சென்று சம்பவம் நடைபெற்ற உப்புவளை பற்றைக்குள் ஒளித்து வைத்தோம். பின்பு ஒட்டுமடத்திலுள்ள அப்போதிக்கரியின் வீட்டிற்குச் சென்றோம். அன்றிரவு அப்போதிக்கரியின் வீட்டிலேயே தங்கினோம்.

மறுநாளான 18ம் திகதி காலை 5மணிபோல் அங்கிருந்து புறப்பட்டோம். ஆவரங்கால் தேநீர்க்கடையில்தேநீர்குடித்துவிட்டு சந்தியில் நின்றோம்.

ஆவரங்கால் சந்தியில் நாங்கள் நின்றபோது நரை என்பவர் ஒரு மினி பஸ்சில் வந்து பி. பீ. 11 பஸ்சில் எமது எதிரிகள் வருகிறார்கள் என்று சொன்னார்.

உடனே நாங்கள் உப்புவெளிச் சந்திக்கு வந்து இறங்கி ஒவ்வொருவரும் ஆயுதங்களை எடுத்துக்கொண்டோம். அதே நேரம் காரை கல்லுவம் றோட்டிற்குப் போய் காரைத் திருப்பிக்கொண்டுவரும்படி கார்ச் சாரதியிடம் சொன்னோம்.

அப்போது பஸ் வந்தது. சிவராசா பஸ்சிற்கு வெடிவைத்தார். பிரயாணிகள் ஓட்டம் பிடித்தார்கள்.

கொலையென தீர்ப்பு

வல்லை உப்புவெளியில் நடைபெற்ற விளக்கமறியல் கைதிகள் மூவரினதும் மரணங்கள் கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளன.

தணிக்கை

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை இப்பொழுது அமுலில் உள்ளது.

சீ-நோர்
14 ஆண்டுகள்

அங்கு என்ன நடக்கிறது?

இப்பாரிய திட்டம் எதனைநோக்கிச்சென்று கொண்டிருக்கிறது?

"ஈழநாடு" கள ஆய்வுக் குழுவின் கண்டுபிடிப்புகள், ஞாயிறு இதழில் வெளிவருகிறது.

இப்பத்திரிகையாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிடெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி 501ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் 25-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a NewsPaper the General Post office: Sri Lanka. Regd. Q. B. 10/235/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி 7707, 839, 8188.